


சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில்,ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் .கே.ஆர், ஸ்ரீராம், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு தலைமை வழக்கறிஞர் .பி.எஸ். ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விழுப்புரம் மாவட்டத்திற்கு முதல்வர் வருகை!

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜன.27- விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் அவர்களுக்கு சிறப்பான முதல்வர் மு.க. ஸ்டாலின் வரவேற்பு அளிக்கப்படுகிறது. இது குறித்து விழுப்புரம் தெற்கு ) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் கழக முன்னோடி பெரியவர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபத்தையும், இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்த போராளிகளின் நினைவு மண்டபத்தையும் திறந்து வைத்து அரசு சார்பிலான நல உதவித் திட்டங்களை வழங்கவும் விழுப்புரத்திற்கு இன்று (27.01.2025-திங்கட்கிழமை) இரவு 8 மணிக்கு வருகை தர உள்ளார்.

நாளை (28.01.2025- - செவ்வாய்க் கிழமை) காலை 8.30 மணிக்கு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ள முதலமைச்சர் அவர்களுக்கு கழக துணை பொதுச் செயலாளர் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரக வளாக வாயிலில் இருந்து விழா நடைபெறும் ஜானகிபுரம் புறவழிச்சாலை வரை வரவேற்பு அளிக்க இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், சமூக ஆர்வலர்கள், மகளிர் அமைப்பினர், மாணவர் அமைப்பினர் என அனைத்துத் தரப்பினரும் வரவேற்பிலும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு தென்னூர் உழவர் சந்தை பாலம் அருகில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு தியாகிகள் நினைவிடம் சென்று மொழிப்போர் தியாகி சின்னச்சாமி நினைவிடத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யா மொழி தலைமையில் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் புடைசூழ மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழு தலைவர் மதிவாணன், திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமை செயற்குழு உறுப்பி னர்கள் வண்ணை அரங்க நாதன், கே.என்.சேகரன், சபியுல்லா மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### இரும்பின் காலம் குறித்த பிரகடனம்!

# முதல்வருக்கு நல் வணக்கம்!



இரும்பின் தொழில்நுட்பம்
5300 ஆண்டுகட்கு முன்பே
தமிழ்மண்ணில்
புழக்கத்திற்கு வந்துவிட்டது
என்ற பிரகடனத்தை
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
வெளியிட்டபோது
அவர் குரலிலும் முகத்திலும்
தொனித்தது
ஒட்டுமொத்தத் தமிழினத்தின்
பெருமிதம் அல்லவா?

உலக ஆய்வகங்களின்
கதிரியக்கப்
பகுப்பாய்வுக்குப் பிறகு



இந்தத் தொன்மை
உண்மையென்று
உணர்த்தப்பெற்றுள்ளது

தீ இரும்பு சக்கரம் என்ற
கண்டுபிடிப்புகளே
மனிதகுல வரலாற்றை
வளைத்துத் திருப்பியவை

இதில் இரும்பின் இடம்
உறுதியானது

திருவள்ளுவர் இரும்பைப்
பொன் என்று சுட்டுகிறார்

“தூண்டில் பொன்
மீன்விழுங்கி யற்று” என்கிறார்

இந்தப் பெருமை
இந்திய நாகரிகத்துக்குத்
தமிழர் முன்னோடி என்பதை
உறுதிசெய்யும்

முதலமைச்சருக்கும்
இதன் பின்புலத்திலிருந்த
அறிவுப்புலத்தார்க்கும்
நல்வணக்கம் செலுத்தி
நன்றிசொல்கிறேன்



கவிப்பேரரசு
**வைரமுத்து**


